


திண்டிவனம் முன்னாள் நகரச் செயலாளர் கபிலனின் மாமனார் மறைவுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, திருமதி விசாலாட்சி பொன்முடி ஆகியோர் அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் இரா.மாசிலாமணி, மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் முனைவர் சிட்டிபாபு, ஒலக்கூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் பாங்கை. சொக்கலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், திண்டிவனம் 33வது நகர மன்ற உறுப்பினருமான சீனி.சின்னசாமி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் வசந்தா, பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், நகர மன்ற உறுப்பினர்கள் பார்த்திபன், அரும்பு குணசேகரன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், எல்.ஐ.சி. ராஜேஷ், ஏழுமலை, ராஜேந்திரன், முன்னாள் நகர துணைச் செயலாளர் சிவகுமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சுபாஷ், ஐ.கே.எஸ். ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

## இராயபுரத்தில் கையெழுத்து இயக்கம்!

*சென்னை, நவ.1-*

*சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் எழை எளிய கல்வி தகுதி நிராகரிக்கும் நீட் எதிர்த்து இந்திய குடியரசு தலைவர் அவர்களுக்கு நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து நீட் விலக்கு நம் இலக்கு எனும் நிகழ்ச்சியை இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா. செந்தில்குமார் ஏற்பாட்டில் 51வது வட்டத்தில் (30.10.2023) காலை 10.00 மணயளவில் சஞ்சீவிராயன் கோவில் தெருவில் நடைபெற்றது.*

*சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் தா.ஜெய பாலன், பி.சேகர்,கு.சுந்தர், லோ. மோகன், வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதீஸ்குமார், எஸ்.குமார், எஸ்.சுரேஷ், அத்தோ பி.முனுசாமி, ஐ.சி.எப்.பழனி, வி.குமார், என்.பாரி, கே.நாட்டாமை, யு. அனிபா, கே.எஸ்.குமார், கே.மணிகண்டன், தா. ரவி, க.சுரேஷ், ஜி. உமாபதி, பி.எஸ்.நாராயணன், எம்.எம்.சந்துரு, வி.சரவணன்,டி. நந்து, ஜி.ஆறுமுகம், கே.கவியரசு, கே.சசி, டி.பெருமாள், எஸ்.சம்பத், எம்.வல்லவராஜ், இரா.முரு கன், டி.பார்த்தசாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

*வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் நன்றி கூறினார்.*

விருதுநகர் மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ.1-**

**விருதுநகர் மாவட்டத்தில் சாலைவிபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம் இது குறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், வ.புதுப்பட்டி கிராமம் அருகில் 30-10-2023 அன்று மாலை வத்திராயிருப்பிலிருந்து வ.புதுப்பட்டி கிராமத்திற்கு அர்ச்சுனாபுரம் கிராமம் வழியாக மாதவ ராயன்குளம் கண்மாய் அருகில் சென்று கொண்டிருந்த சிற்றுந்து கட்டுப்பாட்டை இழந்து சாலையின் ஓரத்தில் உள்ள தென்னந்தோப்பில் கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் நந்தகுமார், (த/பெ.இருளப்பன்) மற்றும் பாண்டி (எ) தேவேந்திரன் த/பெ. சின்னப்பராஜ் ஆகிய இரு மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# தஞ்சை தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!

*தஞ்சாவூர், நவ.1-*

*தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் பணியிணை தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் கா.அண்ணா துரை எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*



*அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி விரைவில் வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடி (பூதி) வாரியாக அந்தந்த வாக்காளர் பட்டியலில், 100 வாக்காளர்களுக்கு ஒருவர் வீதம் ஒவ்வொரு பூத்திற்கும் பூத் கமிட்டி (BLC) அமைக்கப் பட்டுள்ளது. மேலும் நவம்பர் 04,05 மற்றும் 18,19 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாக்காளர் சிறப்பு சேர்க்கை முகாம் மேற்கண்ட தேதிகளில் நான்கு நாட்கள் நடைபெற உள்ளது.*

*முகாம் நாட்களில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதி செயலாளர்கள் அனைத்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், தங்கள் பகுதிக்கு உட்பட்ட வார்டு மற்றும் கிளை கழக செயலாளர்கள், நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோருடைய துணையோடு தற்போது வாக்குச்சாவடி நிலைய வழங்கப்பட்டுள்ள புதிய வாக்காளர் பட்டியலை சரிபார்த்து அந்தந்த வாக்குச்சாவடியில் உள்ளவர்கள் பெயர் பட்டியலில் வந்துள்ளதா என்றும் இடமாறுதல் செய்துள்ளவர்கள் இறந்தவர்கள், நிரந்தரமாக வெளியூர் சென்றவர்களை கண்டறிந்து அவர்களை நீக்கம் செய்வதுடன், புதிதாக திருமணம் ஆகி வந்தவர்கள், குடி பெயர்ந்து வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதுடன், அந்தந்த வாக்குச்சாவடிக்கு நிர்வாகிகள் (BLC), BLA2 ஆகியோர் நேரில் கள ஆய்வு செய்து 01012024 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களை கண்டறிந்து பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப் படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க ஆயத்தப் படுத்த வேண்டுகிறேன்.*

*முகாம் நடைபெறும் நாளான 04.05 மற்றும் 18,19 ஆகிய தேதிகளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு அழைத்து சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாவடிக்கு படிவம் 6, 6ஏ, 7, 8 போன்ற மனுக்களின் விவரங்களை சேகரிப்பதுடன் அன்றைய தேதிகளில் நமது கழகத்திற்கு ஆதரவு தரும் நபர்கள் எத்தனை பேர் புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்டக் கழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்புவதுடன், முகாம் முடிவுற்றால் மேற்கண்ட தேர்தல் பணிகளை தொடர்ந்து செய்து புதிய வாக்காளர் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களிலோ, வாக்காளர் சேகரிப்பதற்கான தாசில்தார் அலுவலகத்திலோ, மனு கொடுக்கும் கால அவகாசம் 27.10. 2023 முதல் 12.12.2023 வரை கொடுக்கலாம். எனவே, நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்தி கொண்டு இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழக அலுவலகத்திடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*மிகவும் முக்கியமான தேர்தல் பணி என்பதால் நமது முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலை ஏற்று அக்கறையோடு பணியை நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம். எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*



திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் நகராட்சி, காடையூரான் வலசில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து கலைஞரின் கண்ணொலி காப்போம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு கண்கண்ணாடிகளை வழங்கினார். இதில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், வெள்ளக்கோவில் நகரக் கழகச் செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், நகர்மன்றத் தலைவர் கனியரசி முத்துக்குமார், வட்டார் மருத்துவ அலுவலர் மரு.ராஜலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.




செஞ்சி ஒன்றியம் வெளாமை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளார்.

# தேவரும் அண்ணாவும்!

**(சிறுகதை மன்னன் - முகவை மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் 16.09.1990 ஆம் ஆண்டு “ஆனந்த விகடன்” வார இதழில் எழுதி வெளியான கட்டுரை ‘பாறையிலும் பயிர்கண்டார்’. அதை இங்கே எடுத்து வெளியிட்டுள்ளோம்)**

பேரறிஞர் அண்ணா அனைத்துத் துறைகளிலும் பெரு வெற்றி அடைந்ததற்குக் காரணம் அவரது அறிவாண்மை மட்டுமல்ல, அவரிடம் நிறைந்திருந்த இனிய இயல்புகளும் பிரதானமானவை.

‘கோபம் கொடியதுதான்; இருப்பினும் கொஞ்சம் நேரம் மௌனமாக இருந்து விட்டால் கோபம் ஆறிவிடும்’ என்ற கொள்கையை இறுதிவரை கடைப்பிடித்து அதன் மூலம் மகத்தான வெற்றியை ஈட்டிக் கொண்டவர் அண்ணா, 1962 - வாக்கில் நடந்த சம்பவம் ஒன்று இன்றைக்கும் என் மனத்தில் அழியாத ஓவியமாக நிலைத்து நிற்கிறது.



இப்போது இருப்பதைப் போல அப்போது தொலைபேசி வசதிகள் இல்லாத காலம் அன்று கழகத்தின் பொருளாளராக இருந்த கலைஞரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், **“நீங்கள் உடனடியாகத் திருச்சிக்குச் சென்று, அங்கு ரத்தினவேல் தேவர் இல்லத்தில் தங்கியிருக்கும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைச் சந்தித்து நடக்கவிருக்கும் தேர்தலில், சிவகங்கைப் பாராளுமன்றத் தொகுதியில், தி.மு.க. வேட்பாளரை ஆதரிக்கக் கோரி அவரிடம் வேண்டுகோள் விடுத்து வரும்படி அண்ணா பணித்திருக்கிறார்”** என்று கலைஞர் குறிப்பிட்டிருந்தார். மறுநாள் காலையே திருச்சி புறப்பட்டுவிட்டேன்.

மாலை நான்கு மணியளவில் தேவரைச் சந்திக்க நான் அனுமதிக்கப்பட்டேன். தேவரின் உதவியாளர் எனக்குப் பத்து நிமிடங்கள்தான் அவகாசம் கொடுத்தார். எனக்குப் பிறகு தேவரைச் சந்திக்க நிறையப் பேர் காத்திருந்தார்கள். தேர்தல் நேரமல்லவா!

பசும்பொன் தேவர் மாடியில் ஒரு தேக்கு மர ஊஞ்சலில், தலைக்குத் தலையணையில்லாமல் படுத்தபடி ஆடிக் கொண்டிருந்தார். நான் அவரைப் பலமுறை தொலைவிலிருந்து பார்த்திருக்கிறேன்... அவரது மேடைப் பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். அருகில் போய் அவரோடு பேசுவது என்பது அதுதான் முதல் முறை, அரைகுறையாக நரைத்த முடி. எலுமிச்சம்பழம் போல மூக்கு. களையான முகம். இன்ன வண்ணம் என்று சொல்ல முடியாத ஆற்றுமணல் நிறம்.



**சிறுகதை மன்னன்**
**எஸ்.எஸ்.தென்னரசு**
*முகவை மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்*

கிடைத்திருக்கும் பத்து நிமிடங்களுக்குள் வந்த காரியத்தை முடித்துக் கொள்ளத் துடித்தேன் ஆனால், தேவர் அதற்கு வாய்ப்பளிக்காமல் தி.மு.கவைப் பற்றிய விவரங்களையே துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்தார் தி.மு.க. வைச் சேர்ந்த ஒரு முக்கிய புள்ளியிடம் தேவர் மனம் விட்டுப் பேசுவது அதுதான் முதல் முறையாக இருக்குமோ என்று நான் சந்தேகித்தேன். பின்னாளில் விசாரித்த போது அதுதான் உண்மை என்று தெரிந்தது.

இதற்கிடையில் கீழேயிருந்து தேவரின் உதவியாளர் - நேரம் முடிந்து விட்டது என்று எனக்கு ஒரு துண்டுச் சீட்டு அனுப்பி விட்டார்.

வந்தது வீணாகிவிடக் கூடாது என்ற எண்ணம் எனக்கு வந்துவிட்டது. ஆகவே, உடனே முன்னுரை எதுவும் போடாமல் வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டேன். தேவர் முதலில் சிரித்தார்.

‘சாத்தியமில்லாத விஷயம்; இருந்தாலும்...” என்று இழுத்தார்.

“நீங்கள் ஆதரிக்க முடியாவிட்டாலும், கழக வேட்பாளரை எதிர்க்காமல் இருந்தாலே போதும்!” என்றேன். “அதுபற்றி வேண்டுமானால் நான் யோசிக்கிறேன்” என்றார்.

“தேவர் இப்படி யாரிடமும் இணக்கமாகப் (positive) பேசியதில்லை” என்று கீழே வந்ததும் அவரது உதவியாளர் சொன்னார்.

மகிழ்ச்சியோடு நான் அவரிடம் விடை பெற்றேன். ஆனால், தேவர் என்னை விடவில்லை. அப்போதே தேவரின் மனமாற்றம் எனக்குப் புரிந்து விட்டது. “உங்கள் கட்சியில் அண்ணன் - தம்பி என்கிற முறையில் இயக்கத்தை நடத்துவது எதற்காக? தலைவன் - தொண்டன் என்கிற முறையில்தான் ஒரு அரசியல் கட்சி இருக்க வேண்டும்’’ என்றார்.



நான் ஏதாவது பதில் சொன்னால், வந்த காரியம் கெட்டு விடுமோ என்று எண்ணிப் பதில் சொல்லாமல் இருந்து விட்டேன்.

தேவர் மறுபடியும் பேசினார். அப்போது பேசியதை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது.

**“அண்ணாதுரையைப் பற்றி எடுத்த எடுப்பில் நான் கணித்தது தவறு. அவர் மிகவும் பெருந்தன்மையானவர். சில ஆண்டுகளுக்கு முன்பு மதுரை ஆடிவீதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் நான் அவரைப் பற்றிக் கடுமையாக விமரிசனம் செய்துவிட்டேன், அதே தினத்தில் மதுரையில் அண்ணாதுரைக்கு ஒரு பொதுக்கூட்டம் இருந்தது. அதில் என்னைத் தாக்குவார் என்று எங்கள் மக்கள் திரண்டிருந்தார்கள். ஆனால், அண்ணாதுரை முற்றிலும் எதிர்பாராத வகையில் என்னை ஒரே தூக்காகத் தூக்கிப் பாராட்டிப் பேசிவிட்டார். தேவர் இல்லாவிட்டால் தென் பாண்டி நாட்டில் காங்கிரஸே வளர்ந்திருக்காது என்று என்னை வெகுவாகப் புகழ்ந்து பேசினார். இது நான் எதிர்பார்க்காத ஒன்று. அதுமட்டுமல்ல, என்றைக்கும் நான் மறக்க முடியாத நிகழ்ச்சி”** என்றார் தேவர்.



நான் மனத்துக்குள்ளேயே மகிழ்ந்தேன். எதற்காக? அறிஞர் அண்ணா கல்லிலேயும் காவியம் தீட்டிவிட்டாரே என்பதற்காக. இந்தச் சம்பவங்களை அண்ணாவிடமும், கலைஞரிடமும் விவரமாகச் சொன்னேன். இது நடந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு தேவர் உடல்நலம் குன்றி மதுரை திருநகர் வந்து சேர்ந்து விட்டார்.

அதே ஆண்டில் திருப்பரங்குன்றத்தில் தி.மு.க. மாநில மாநாடு நடந்தது. அண்ணா, தேவர் சொன்னதையும், கேட்டதையும் மனத்திலேயே வைத்திருந்து மாநாட்டுப் பேருரையில் அதற்கு விளக்கம் அளித்தார்.

**‘’நான், அண்ணன் - தம்பி என்கிற முறையில் கட்சி வளர்ப்பது பற்றிச் சிலர் வியப்படைகிறார்கள். ஒரு குடும்பத்தின் சொத்தில் அண்ணனுக்குள்ள உரிமையும் பங்கும் தம்பிக்கும் தவறாது கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் கட்சியில் அண்ணன் - தம்பி முறையைக் கடைப்பிடிக்கிறேன் தி.மு.க. ஒரு குடும்பப் பாசமுள்ள இயக்கம்’** என்று அண்ணா பதில் சொன்னார். இந்தத் தகவல் படுக்கையில் இருந்த தேவருக்குத் தெரிவிக்கப்பட்டது. தேவர் ஆறுதல் அடைந்து திருப்திப்பட்டதாக அறிந்தேன்.

தேவரின் கடைசி கால மனமாற்றத்தை எண்ணி அண்ணா வியப்படைந்தார், 1963இல் தேவர் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டுத் திருநகரில் காலமானார். இதைக் கேள்விப்பட்ட அண்ணா துணுக்குற்று, உடனே சென்னையிலிருந்து காரில் புறப்பட்டு, பசும்பொன் கிராமம் வந்து தேவரின் உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். அன்று அண்ணா ஆற்றிய இரங்கல் உரையில், **“மண்ணுக்குள் கிடந்தவர்களை எல்லாம் மாணிக்கமாக்கிய மாபெரும் தேசியத் தலைவர் தேவர்”** என்று புகழாரம் சூட்டினார். இன்றும் அந்த வரிகள் தேவர் பிறந்த மண்ணில், பனை மரங்கள் மண்டிக்கிடக்கும் அந்த வனாந்திரப் பகுதியில் சலசலத்துக் கொண்டிருக்கின்றன.

தனது பெருந்தன்மையால் தேவரின் உள்ளத்தில் அண்ணா விதைத்த விதை, எதற்கும் அசையாத பாறை போன்ற உள்ளம் படைத்த தேவரை வசீகரித்து விட்டது. அன்று தேவரின் கோட்டைக்குள் நீர்மூழ்கிக் கப்பலைப் போல் நுழைவதற்கு வாய்ப்பளித்தது அண்ணாவின் இனிய இயல்பான பொறுமையேயன்றி வேறல்ல!

**எழுத்தாலும், பேச்சாலும் வெல்ல முடியாத ஒன்றைக் கண்ணியத்தாலும், கனிவாலும் வென்று பாறையிலும் பயிர் காணவல்ல பண்பாளர் என்று அண்ணாவைக் குறிப்பிடுவது வரலாற்றின் வற்புறுத்தல் என்று கொள்ளலாம்!**

நன்றி
**ஆனந்த விகடன்**
16.09.1990